DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.60/2023**

**prosecution witness: PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>18.09.2024</u>

<u>குறுக்கு விசாரணை:–</u>

எதிரி மீது தாக்கல் செய்துள்ள வழக்கு மற்றும் நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். எனது வழக்கிலும், நிருபண வாக்குமூலத்திலும் முதன் முதலாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி எந்த தேதியில் வாங்கினார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நான் சொல்லாததால் எனது புகார் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

எதிரி கொடுத்த காசோலையை எந்த வங்கியில் பணவரவிற்காக செலுத்தினேன் என்றால் தங்கச்சிமடத்தில் உள்ள இந்தியன் வங்கியில் செலுத்தினேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 ஆவணத்தில் இராமநாதபுரம் இந்தியன் வங்கியில் பண வரவிற்காக காசோலை செலுத்தியதாக உள்ளது என்றால் சரியல்ல. தங்கச்சிமடத்தில்தான் செலுத்தினேன். நான் பி.காம்படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் ஓரளவிற்கு தெரியும். காசோலையை present செய்யும் வங்கி என்றால் காசோலையை சமர்பிக்கும் வங்கி என்று அர்த்தம் என்றால் சரிதான். காசோலையை வங்கி கிளையில் சமர்பிப்பது presentation of branch name என்றால் சரிதான். எனது காசோலையை present செய்தவங்கியின் பெயர் இராமநாதபுரம் என்று நான் தாக்கல் செய்துள்ள 2 வது ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் தங்கச்சிமடத்தில் காசோலையை சமர்பித்தற்கு ஒரு counterfile கொடுத்தார்கள் அது என்னிடம்உள்ளது. தங்கச்சிமடம் இந்தியன் வங்கியில் இருந்து எனக்கு ஒரு குறிப்பாணை கொடுததார்கள் என்றால் சரிதான். நான் முருகேசன் ஏஜென்சி என்ற பெயரில் ஏஜென்சி நடத்திவருகிறேன். அந்த ஏஜென்சியில் காளிமார்க் சோடா, பொண்வண்டு சோப்பு, அமிர்தான்சன், பேனா சோனிக் பேட்டரி போன்றவை நடத்தி வருகிறேன். அந்த நிறுவனத்தின் பொருட்களை விற்பதற்குரிய stockist நான் என்றால் சரிதான். எனது நிறுவனத்திற்கு டின் நம்பர் இருந்தது தற்போது GST நம்பர் உள்ளது. தங்கச்சிமடம் பஞ்சாயத்திற்கு உட்பட்ட பகுதியில் வைத்துள்ளேன்.தொழில் வரி முருகேசன் ஏஜென்சி என்ற பெயரில் செலுத்தி வருகிறேன். அதனால் எனது ஏஜென்சிக்கு வரவு செலவு கணக்குஉண்டு என்றால் சரிதான். எனது ஏஜென்சியை 12 ஆண்டுகாலமாக நடத்தி வருகிறேன்.

எனது ஏஜென்சிக்கு ஒவ்வொரு வருடமும்விற்பனை வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். விற்பனை வரி செலுத்தவேண்டும் என்றால் ஏஜென்சியின் வரவு செலவுகளை சமர்பித்துதான் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். எனது ஏஜென்சியை தங்கச்சிமடத்தில் பதிவு செய்துள்ளேன். அதனை ஆடிட்டர் பார்த்து கொள்வார்கள். முருகேசன் ஏஜென்சிக்கு நான்தான் முதலாளி என்றால் சரிதான். எனது ஏஜென்சியில் எதிரி கடனிற்காக எந்த பொருளும் வாங்கவில்லை என்றால் சரிதான். எனது கணக்குவழக்குகளில் எதிரி எனக்கு கடன் கொடுக்கவேண்டும் என்ற பதிவு கிடையாது என்றால் சரிதான். நான் வருமான வரியும் செலுத்தி வருகிறேன்.

எனது 2022-2023 ஆண்டிற்கான கணக்குகளில் எதிரி என்னிடம் கடன் பெற்றார் என்று எந்த விபரமும் இல்லை என்றால் சரிதான். நான் வட்டி தொழில் செய்பவர் என்றால் இல்லை. அதற்குரிய லைசன்ஸ்சும் வாங்கவில்லை. எனது நிறுவனத்தின் பதிவு எண் என்றால் பதிவுஎண் உள்ளது. எனக்கு நினைவில்லை. அந்த நிறுவனம் எந்த முகவரியில் இயங்குகிறது என்றால் இராமேஸ்வரம் வட்டம், தங்கச்சிமடம் கிராமம், வ.உ.சி தெருவில் இயங்குகிறது. கதவு எண் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள எழுத்துக்கள் அனைத்தும் பல்வேறு பேனா மையால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது ஏஜென்சிக்கு தனியாக வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான்.

இந்த காசோலையானது எனது ஏஜென்சிக்கு தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையை எனது ஏஜென்சி கணக்கில் பண வரவிற்காக செலுத்தவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய ஏஜென்சி கணக்கில்தான் பணவரவிற்கு சமர்பித்தேன். பொதுவாக எனது ஏஜென்சியில் பொருள்கள் வாங்கி கடன் வைக்கும் நபர்களிடம் என் ஏஜென்சி பெயரில் காசோலை பெற்றுக்கொள்வேன். எனது வழக்குப்படி எதிரி என்னிடம் தனிப்பட்ட முறையில் கடன் வாங்கியதற்காக ம.சா.ஆ.1 ஆவணத்தை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக commerce படித்தவருக்கு ஒரு நிறுவனத்தை நடத்தக்கூடிய நபர் தனி நபர் என்றும், அந்த நிறுவனம் தனி நபர் என்றும் எனக்கு தெரியும். எனது நிறுவனத்தின்பெயரில் போடப்பட்ட காசோலை திருப்பப்பட்டால் என் நிறுவனம் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றும், அந்த நிறுவனத்தோடு சேர்நது நானும் வழக்கு



தாக்கல் செய்யவேண்டும்என்றால் சரிதான்.

ம.சா.ஆ.3 ஆவணத்தில் எனது நிறுவனத்திற்காக நான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் மட்டுமே அறிவிப்பு அனுப்பியுள்ளேன்.

அதேபோல் இந்த வழக்கை எனது நிறுவனம் தாக்கல் செய்யவில்லை. நான் மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன். எனது நிறுவனத்தின்பேரில் வழங்கப்பட்ட காசோலைக்காக ம.சா.ஆ.1ல் சொல்லப்பட்டுள்ளநிலையில் எனது நிறுவனம் எதிரி மீது எந்த நடவடிக்கையும் செய்யவில்லை அதனால் நான் அனுப்பிய அறிவிப்பு செல்லாதுஎன்றும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல. எனது வழக்கில் எதிரி என்னிடம் 10.05.2022ல் ஒரு லட்சம் வாங்கியதாக காட்டக்கூடிய ஆவணம் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 10.05.2022ம் தேதியில் நான் எதிரிக்கு ஒரு லட்சம் கொடுக்கக்கூடிய வசதியில் நான் இல்லை என்றும், ஒரு இலட்சம் என் கைவசம் இல்லை என்றால் சரியல்ல. பொதுவாக கடன் கொள்ளும் நாளில்தான் ஆதாரம் எழுதி வாங்கிகொள்வோம் என்றால் சரிதான். எதிரி என்னிடம் 10.05.2022ம் தேதி ஒரு லட்சம் கடன் வாங்கவும் இல்லை, அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.1காசோலையை என்னிடம் அவர் நேரடியாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1காசோலையில் கண்டுள்ள பணம் பெறுபவர் payee நான் கிடையாது என்றும், அதனால் நான் இந்த வழக்கை எதிரி மீது தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. பொதுவாக வட்டிக்கு பணம் கொடுக்கவேண்டும என்றால் அரசிடமிருந்து சரியான உரிமம் பெற்றியிருக்கவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு உரிமம் பெறாத நபர்கள் யாரும் மாத வட்டிக்கு கடன் கொடுக்கமுடியாது என்றால் சரிதான். எதிரி 10.05.2022ம் தேதி என்னிடம் கடன் வாங்கவும் இல்லை என்றும், அதற்கு மாதம் 1க்கு ரூ.100/−க்கு ரூ.1 வீதம் வட்டி சேர்த்து செலுத்துவதாக ஒப்புகொள்ளவில்லை என்றால் சரியல்ல.

அதேபோல் எதிரி என்னிடம் 15.07.2022ம் தேதியில் ம.சா.ஆ.1 காசோலையை என்னிடம் நேரடியாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் காசோலையை 28.06.2022ம் தேதி வங்கியில் தாக்கல் செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது புகாரில் 26.09.2022ம் தேதி காசோலையை வங்கியில் தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சொல்லவேண்டிய விபரத்தை சொல்லமால், தவறான விபரத்தை சொல்லியுள்ளதால் இந்த புகார் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது துணைவியாரும், எதிரியின் துணைவியாரும் நல்ல பழக்கவழக்கம் உடையவர்கள் என்றால் சரிதான். எனது துணைவியார் பெயர் இந்திரா ஆகும். எதிரியின் துணைவியார் பெயர் சூசை ராணி மேரி ஆகும். அவர் மனைவி எனது வீட்டிற்கு வருவார். எனது மனைவி அவர் வீட்டிற்கு போவார். அவர்கள் இருவருக்கும் இடையில் கொடுக்கல் வாங்குதல் உண்டு என்றால் சரிதான். எனது மனைவி எதிரி மனைவியின் பழக்கவழக்கத்தில் இருப்பதால் எதிரி சம்மந்தப்பட்ட விபரங்கள் அனைத்தும் எங்கு நன்கு தெரியும் என்றால் சரிதான்.

நான் ம.சா.ஆ.1 காசோலையை பணவரவிற்காக வங்கியில் சமர்பித்த நிலையில், எதிரியின் வங்கி கணக்கு block செய்யப்பட்டுள்ளது என்று தகவல் தெரிவித்துள்ளார்கள் என்றால் சரிதான். ஏன் block செய்து வைத்துள்ளார்என்று நான் வங்கியில் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. இந்த வழக்கில் சாட்சிகளாக



சொல்லப்பட்டுள்ள மண்டபம் பரோடா வங்கி கிளை மற்றும் தங்கச்சிமடம் இந்தியன் வங்கி கிளை மேலாளர்களை தேவைப்பட்டால் விசாரிப்பேன். எதிரியின் காசோலையானது காணாமல் போனது சம்மந்தமாக வங்கியில் சொல்லி அவரை கணக்கை block செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரியின் மனைவி எனது மனைவிக்கு இன்றைய தேதிவரை கடன் தொகை எதுவும்

செலுத்தவேண்டியது இல்லை என்றால் எனக்கு தெரியாது. இன்றைய தேதிவரை எனது மனைவியும், எதிரியின் மனைவியும் கொடுக்கல் வாங்கல் செய்து வருகிறார்கள் என்றால் தற்போது இல்லை. எனது மனைவி எதிரியின் மனைவியிடம் பணம் பெறுவதற்காக அவரது வீட்டிற்கு அடிக்கடி சென்றுவருவார் என்றால் சரிதான். எனக்கு எதிரியின் கையெழுத்து நன்கு தெரியும்.

எனது மனைவி எதிரியின் வீட்டில் எதிரியின் மனைவியிடம் பணம் பெறுவதற்காக சென்றபோது எதிரி வைத்திருந்த காசோலையை எதிரிக்கு தெரியாமல் எடுத்து வந்துவிட்டார் என்றால் சரியல்ல. அதன்பின்பாக இந்த காசோலையை நானாக நிரப்பி எதிரியின் கையெழுத்தை நானாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி ஏற்கனவே தனது கணக்கை block செய்துவிட்டார் என்றும், எதிரி எனக்கு எந்த கடனும் செலுத்த தேவையில்லை என்றும், எதிரியின் காசோலையை நான் திட்டமிட்டு நிரப்பி அவரது கையெழுத்தை போட்டு சமர்பித்தால் திருப்பப்பட்டுள்ளது என்றும் எதிரியின் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 காசோலையைஎதிரி என்னிடம் கொடுக்கவில்லை அதனால் நான் சட்டப்படியான holder கிடையாது என்றால் சரியல்ல.

நான் இந்த காசோலையை வைத்து எதிரியின்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கத்தக்க வகையில் holder in due course கிடையாது என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் 10.05.2022ம் தேதி கடன் வாங்கவும் இல்லை அதற்கு ஆதரவாக 15.07.2022ம் தேதி ம.சா.ஆ.1 காசோலையை எனக்கு வழங்கவும் இல்லை என்றால் சரியல்ல. தங்கச்சிமடம் இந்தியன் வங்கியில் ம.சா.ஆ.1 காசோலையை நான் சமர்பித்தற்கான குறிப்பாணை எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அறிவிப்பிற்குகிணங்க அந்த அறிவிப்பில் காசோலையை இராமநாதபுரம் இந்தியன் வங்கியில் சமர்பித்ததாக சொல்லிவிட்டு பின்னிட்டு அடித்து தங்கச்சிமடம் கிளை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் குறிப்பாக நான் அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளவில்லை எதிரிக்காக ராணி என்பவர் பெற்று'கொண்டுள்ளார் என்றால் சரிதான். நான் எதிரி மீது தாக்கல் செய்துள்ள இந்த புகார் மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின்படி அதன்பிரிவுகளுக்கு உட்பட்டு தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் இந்த புகார் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.